மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், நீங்கள் சுருக்கமாகப் பேசக் கற்றுக்கொள்ளுங்கள்.

திரு. தா. உதயசூரியன்: ஆகமொத்தம் 12 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் மட்டும்தான் இணை மின் உற்பத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மீதமுள்ள 11 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் co-generation திட்டப் பணிகள் 40 சதவிகிதம் மேற்கொள்ளப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. அது தொடர்ந்து நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

(அஇ) நீர்நிலைகள், சீமைக் கருவேல மரங்களை அகற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை அவர்கள்.

திரு. ஆர். தங்கதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நிலக்கோட்டையில் பெரிய கண்மாய் இருக்கிறது. அந்தக் கண்மாயில் இருக்கின்ற முட்களையெல்லாம் நான் பதவியேற்றவுடனேயே அப்புறப்படுத்திவிட்டேன். ஆனால், மீதமுள்ள குளங்கள் அனைத்திலும் சீமைக் கருவேல முட்கள் நிறைந்திருக்கின்றன. நிலக்கோட்டைத் தொகுதி மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குளங்களிலும் சீமைக் கருவேல முட்களை அகற்றினால் குடிதண்ணீர் பிரச்சினை இல்லாமல் இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

முற்பகல் 10—25

(அஈ) மாதவரம் பால் பண்ணை மருத்துவமனை, வசதிகள் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரம் தொகுதிக்குட்பட்ட மாதவரம் பால்

2017 ஜூலை 19] [திரு. எஸ். சுதர்சனம்]

பண்ணையிலுள்ள 38 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனை கடந்த ஏப்ரல் மாதம் முதல் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு 60 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையில் தினந்தோறும் 1,000 நோயாளிகள் சிகிச்சைப் பெறுகின்றனர். மாதத்திற்கு சுமார் 60 பேர் பிரசவத்திற்காக அனுமதிக்கப்படுகின்றனர். இந்த மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டும்கூட, இதுவரை தேவையான உபகரணங்கள் அளிக்கப்படாமலும், தேவையான மருத்துவர்கள், சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள் போன்ற பணியாளர்கள் நியமிக்கப்படாமலும், இன்னும் பழைய மருத்துவமனையாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக இந்த அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

(அஉ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்த செயலாளர் நியமித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்டத் தொடரின் இறுதி நாளான இன்று, பொதுத்துறை மானியக் கோரிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகளையெல்லாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், எங்களைப் போன்ற புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக ஒரு சில கோரிக்கைகளை மட்டும் சொல்லிக்கொள்கின்றேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தக்கூடிய நேரங்களில் பல்வேறு சூழ்நிலைகளால் காலதாமதம் ஏற்படுகின்றது. இதையெல்லாம் களையக்கூடிய வகையிலும், அண்டை மாநிலங்களில் இருப்பதைப்போல* Official *ஆக* Secretary *ஒருவரை அரசின் சார்பாக நியமனம் செய்து கொடுத்தால், அந்த வேலைகளையெல்லாம்* follow *செய்வதற்கு வசதியாக இருக்கும். அதையும் இந்த அரசாங்கம் செய்ய வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும் உட்காருங்கள்.*